12.11.2007

செய்தி வெளியீட்டு எண்: 732

# செய்தி வெளியிடு– 12.11.2007

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான "தமிழ்நாடு கனிம நிறுவனம்" (டாமின்) 2006–2007ஆம் ஆண்டில் 5 கோடியே 61 இலட்ச ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. லாபத் தொகையில் ஆதாயப் பங்குத் தொகையாக 2 கோடியே 36 இலட்ச ரூபாய், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை டாமின் நிறுவனத்திற்கு வழங்கிய வகையில் டாமின் நிறுவனம் செலுத்த வேண்டிய ஆண்டு குத்தகைக் கட்டணம் 12 கோடியே 58 இலட்ச ரூபாய் ஆக மொத்தம் 14 கோடியே 94 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலையை தமிழக உயர்கல்வித்துறை, சுரங்கம் மற்றும் கனிமத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று (12.11.2007) வழங்கினார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. க. நந்த கிஷோர் உடனிருந்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9.